## JUDICIAL MAGISTRATE COURT NO.I CHENGALPATTU

## CC No.845/2022

## DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)

*****

| | |
|---|---|
| IN THE COURT OF | : JUDICIAL MAGISTRATE NO.I CHENGALPATTU. |
| Deposition of witness for | : PW- 1 |
| Name | : திரு. மனோகரன் |
| Father/Husband's Name | : விக்டர்ராஜ் |
| Village | : நெ.91, எம்டிஜி நகர், |
| Taluk | : கீழ்பெரும்பாக்கம், விழுப்புரம் |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : 63 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 01.09.2025.

Accused present.

**முதல் விசாரணை–**

நான் தற்போது கீழ்பெரும்பாக்கம், விழுப்புரத்தில் வசித்து வருகிறேன். நான் கல்பாக்கம் அணுமின் நிலையத்தில் இயக்குநராக பணிபுரிந்து பணி ஓய்வு பெற்றுவிட்டேன். கடந்த 28.04.2022 அன்று இரவு 10.00 மணியளவில் என்னுடன் பணிபுரிந்த ஆர்டிடெக்ட் திருமதி.தர்ஷினி அவர்கள் போன் மூலம் எனக்கு தொடர்பு கொண்டு victormanoharan24@gmail.com என்ற மின்னஞ்சலிலிருந்து 5 புகைப்படங்கள் மிகவும் தவறான வாசங்களுடன் தோராயமாக 125 நபர்களுக்கான குரூப் இமெயில் Engineering service Group ல் உள்ள அனைவருக்கும் மேற்படி மின்னஞ்சல் அனுப்பப்பட்டுள்ளதாக கூறினார். எனது பணி ஓய்விற்கு முந்தைய நாள் இரவு மேற்படி சம்பவம் நடந்ததால் நானும், எனது மொத்த குடும்பமும் அதிர்ச்சி அடைந்தோம். இதனை தொடர்ந்து எனது மற்ற மேலதிகாரிகள் அவர்களுக்கும் மின்னஞ்சல் காப்பி சென்றதால் எனக்கு போன் மூலம் தொடர்பு கொள்ள ஆரம்பித்தார்கள். அன்றைய தினம் இரவே நான், எனது மகன், மருமகள் ஆகியோர்கள் எனக்கு ஆன்லைனில்

பரீட்சையமில்லாததால் சேர்ந்து ஆன்லைன் மூலமாக போலிஸ் கம்ப்ளைன்ட் பதிவு செய்தோம்.

இந்த வழக்கு ஆவணங்களில் நான் பதிவு செய்த கம்ப்ளைன்டின் எண் குறிப்பிடபப்பட்டுள்ளது. பின்னர் 03.05.2022 அன்று என்னை காவல் நிலையத்திலிருந்து நான் அளித்த புகார் சம்மந்தமாக விசாரணைக்கு அழைத்தார்கள். நான் 04.05.2022 அன்று காவல் நிலையத்திற்கு சென்றேன். என்னிடம் என்ன நடந்தது என்று விசாரணை செய்தார்கள். நான் என்னுடைய தனிப்பட்ட மெயில் ஐடியிலிருந்து nalinmerlin@gmail.com அவர்கள் கூறிய CCB காவல் நிலைய மெயில் ஐடிக்கு மேற்சொன்ன மெயிலை பார்வேர்ட் செய்தேன். தர்ஷினி என்பவர் 28.04.2022 அன்று எனக்கு அவருக்கு வந்த மெயிலை எனக்கு மேற்சொன்ன மின்னஞ்சலுக்கு அனுப்பியிருந்தார்.

போலிசார் என்னிடம் அந்த மெயிலில் உள்ள போட்டோக்களில்உள்ள நபர்களை குறித்து விசாரித்தார்கள். அதில் ஒரு போட்டோ என்னுடையது என்றும், மற்றொரு போட்டோ திருமதி. தர்ஷினி தனியாக இருக்கும் போட்டோ என்றும், மற்ற 3 போட்டோக்கள் பல சந்தர்ப்பங்களில் பல நபர்களுடன் நானும், தர்ஷினியும் சேர்ந்து எடுத்த போட்டோக்களில் இருந்து எங்கள் இருவரை மட்டும் கட் செய்து எடுத்திருந்த போட்டோவும் இருப்பதாக காவல் துறையினரிடம் தெரிவித்தேன். நான் எனக்கு ஏற்பட்ட மன உலைச்சல் மற்றும் எனக்கு ஏற்பட்ட பிரச்சனை குறித்து காவல் துறையினரிடம் தெரிவித்தேன்.

பின்னர் மீண்டும் 27.05.2022 அன்று காவல் நிலையத்திற்கு போலிசார் என்னை அழைத்தார்கள். முதல் தகவல் அறிக்கை என நினைக்கிறேன் அதில் நான் கூறிய விவரங்கள் அனைத்தும் குறிப்பிட்டிருந்தார்கள். அதில் என்னிடம் கையொப்பம் வாங்கினார்கள். நான் வாய்மொழியாக போலிசாரிடம் பணி ஓய்வு பெறுவதற்கு ஒரு நாள் முன்பு இவ்வாறு நடந்து எனக்கும், எனது குடும்பத்தாருக்கும் மன உலைச்சல் ஏற்பட்டதாக தெரிவித்தேன். எத்தனை புகார் நான் காவல் நிலையத்தில் கொடுத்தேன் என்றால் ஆன்லைனில் புகார் அளித்த பிறகு மீண்டும் புகார் ஒன்றை எழுதி கொடுத்தேன். அதில் கையொப்பம் பெற்று கொண்டார்கள். சாட்சியிடம் வழக்கு கோப்பில் உள்ள புகார் காண்பிக்கப்பட்டது. சாட்சி அதில் உள்ள கையொப்பம் தன்னுடையது என்றும், அந்த புகார் தான் அளித்தது தான் என்றும் கூறுகிறார். **அந்த புகார் அதசாஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

புகாரை தவிர வேறு என்னென்ன விவரங்கள் நான் காவல் நிலையத்தில் கொடுத்தேன் என்றால் நான் மன உலைச்சலுக்கு ஆளான இமெயில் மற்றும் தோராயமாக 117 என்று நினைக்கிறேன் சரியாக நினைவில்லை, அத்தனை நபர்களின் இமெயில் ஐடி, மேலும் தர்ஷினி எனக்கு பார்வேர்ட் செய்த மெயிலின் மொத்த பிரிண்ட்அவுட் ஆகியவற்றையும், ஆபிஸ் ஐடியையும் கொடுத்தேன். மேற்படி ஆவணங்களை நான் 04.05.2022 அன்று கொடுத்தேன். எனது பணி ஓய்வு காலத்தில் மிக பெரிய மன உலைச்சல் ஏற்பட்டு எனது பணி ஓய்வு காலம் முழுவதும் பாதிக்கப்பட்டு விட்டது. சாட்சியிடம் வழக்கு கோப்பில் உள்ள மெயில்களின் பிரிண்ட்அவுட் காண்பிக்கப்பட்டது. சாட்சி அந்த ஆவணங்கள் தான் கொடுத்தது தான் என்று கூறுகிறார். **அந்த ஆவணம் அதசாஆ 2 (2 பக்கங்கள்) ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை–**

எதிரி தரப்பில் சாட்சி 2ஐ விசாரிக்கும் வரை குறுக்கு விசாரணை ஒத்தி வைக்குமாறு கேட்டு கொள்ளப்பட்டு மனு தாக்கல் செய்யப்பட்டது. அரசு தரப்பில் மேற்படி மனுவானது சாட்சியை கலைக்க நேரிடும், வழக்கை தாமதப்படுத்த நேரிடும் என்று ஆட்சேபனை செய்யப்பட்டது. மேற்படி மனுவானது கீழ்கண்ட நிபந்தனைக்களுக்குட்பட்டு அனுமதிக்கப்படுகிறது. எதிரி தரப்பில் சாட்சியை கலைக்க முயற்சிக்க கூடாது. அசா 1 மற்றும் சாட்சி 2 இருவரும் ஒரே நாளில் குறுக்கு விசாரணை செய்யப்படவேண்டும். எனவே குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.

Sd.xxx

Typewritten to my dictation in open court read over to the witness in Tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd. V.Lavanya,
Judicial Magistrate No.I,
Chengalpattu.

# JUDICIAL MAGISTRATE COURT NO.I CHENGALPATTU

## CC No.845/2022

## DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)

*****

| | |
|---|---|
| IN THE COURT OF | : JUDICIAL MAGISTRATE NO.I CHENGALPATTU. |
| Deposition of witness for | : PW- 2 |
| Name | : திருமதி. தர்ஷினி |
| Father/Husband's Name | : ராஜ்குமார் |
| Village | : நெ.10, யமுனா DAE டவுன்சிப் |
| Taluk | : அனுபுரம் |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : 37 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 15.09.2025.

Accused absent. PADW for accused. Counsel for accused present.

**முதல் விசாரணை–**

நான் தற்போது அனுபுரத்தில் வசித்து கல்பாக்கம் அணுமின் நிலையத்தில் டெக்னிக்கல் ஆபிசராக பணிபுரிந்து வருகிறேன். எனக்கு திருமணமாகி இரண்டு குழந்தைகள் உள்ளார்கள். கடந்த 28.04.2022 அன்று இரவு 10.00 மணியளவில் எனது மொபைல் போனிற்கு ஒரு மின்னஞ்சல் victormanoharan24@gmail.com என்ற முகவரியிலிருந்து lunch invitation என்ற தலைப்பில் வந்தது. அதை நான் ஓபன் செய்து பார்த்த போது அதிலொரு அட்டாச்மெண்ட் இருந்தது. அந்த அட்டாச்மெண்டில் 5 புகைப்படங்கள் இணைக்கப்பட்டு அந்த புகைப்படத்தில் அசிங்கமாக 60 வயது இளைஞன் என்று குறிப்பிட்டு மனோகரன் என்பவரது புகைப்படமும், 30 வயது காதலியுடன் கலக்குற மச்சி எனவும் அந்த புகைப்படத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது.

மேலும் பல்வேறு சமயத்தில் எடுக்கப்பட்ட குரூப் போட்டோவிலிருந்து Crop செய்யப்பட்ட என்னுடைய மற்றும் மனோகரன் என்பவருடைய புகைப்படத்தையும் ஒன்றாக சேர்த்து அதில் முதலில் இதயத்தைகொடுத்தாய், பிறகு வாகனம் கொடுத்தாய், பணி ஓய்விற்கு பிறகு என்ன செய்வீர்கள், மனைவியும், காதலியும் ஒரே வீட்டில் வசிப்பார்களா முழு மனதுடன் வரவேற்பு என அந்த புகைப்படத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது. எனக்கு அந்த புகைப்படங்களை பார்த்தவுடன்

மிகவும் பயமாக இருந்தது, நான் அதிர்ச்சி அடைந்துவிட்டேன். victormanoharan24@gmail.com என்பது மனோகரனின் மெயில் ஐடி கிடையாது அது எப்படி எனக்கு தெரியுமென்றால் அவசர தேவைக்கு அவருடைய தனிப்பட்ட மின்னஞ்சல் முகவரிக்கு நான் மெயில் அனுப்புவேன். அந்த வகையில் அவருடைய மெயில் ஐடி nalinmerlin@gmail.com என்று எனக்கு தெரியும்.

நான் உடனே மனோகரனுக்கு போன் செய்தேன். அவரிடம் lunch invitation என எதாவது மின்னஞ்சல் அனுப்பினர்களா என்றுகேட்டேன். அவர் இல்லையென்று சொன்னார். நான் அவரிடம் மேற்சொன்னவாறு புகைப்படங்களுடன் அலுவலக பணியாளர்களின் அனைத்து மின்னஞ்சல் முகவரிக்கும் மின்னஞ்சல் அனுப்பப்பட்டுள்ளதாக தகவலை அவருக்கு தெரிவித்தேன். அவர் அந்த மெயிலை தனக்கு அனுப்புமாறு கேட்டார். நான் அந்த மின்னஞ்சலை மனோகரனுக்கு அனுப்பி வைத்தேன். அன்றைய தினம் இரவு எனது கணவர் உறங்கி கொண்டிருந்தார் எனக்கு யாரிடம் சொல்வதென்றே தெரியவில்லை. எனது கணவரிடமே நான் விவரத்தை சொன்னேன். யார் மின்னஞ்சல் அனுப்பியுள்ளார்கள் என்று தெரியவில்லை பார்த்து கொள்ளலாம், பொறுமையாக இருங்கள் என எனது கணவரிடம் சொன்னேன். அன்று இரவு முழுவதும் நான் உறங்கவில்லை.

என்னுடன் பணிபுரியும் பணியாளர்களின் அலுவலக மற்றும் தனிப்பட்ட மின்னஞ்சல் முகவரிக்கு நான் மேற்சொன்ன புகைப்படங்களுடன் கூடிய மின்னஞ்சல் சுமார் 110 நபர்களுக்கு அனுப்பப்பட்டிருந்தது. அடுத்த நாள் மனோகரன் அவர்களுக்கு பணி ஓய்வு என்பதால் நான் அலுவலகத்திற்கு எப்போதும் போல சென்றேன். அங்கு அனைவரும் கூட்டம் கூட்டமாக நின்று கொண்டு போட்டோசை வைத்து கொண்டு பேசிக் கொண்டிருந்தார்கள். எனக்கு மிகவும் அசிங்கமாக இருந்தது. நான் அடுத்த நாள் அலுவலகத்திற்கு சென்ற போது 29.04.2022 அன்று என்னுடைய அலுவலக மின்னஞ்சல் முகவரியான dharshini@igcar.gov.in என்பதற்கு ஒரு மிரட்டல் மின்னஞ்சல் வந்திருந்தது. அதில் மனோகரன் என்பவரின் பணி ஓய்விற்கு நான் வரகூடாது என்றும், மீறி வந்தால் கடும் விளைவுகளை சந்திக்க நேரிடும் என்றும் குறிப்பிட்டு how is my revenge என்ற தலைப்பில் வந்திருந்தது. மனோகரன் அவரிடம் நான் மின்னஞ்சல் வந்த இரவு பேசும் போது அவர் காவல் நிலையத்தில் புகார் அளிப்பதாக சொன்னார். நான் பணியிலிருப்பதால் காவல் நிலைய்திற்கு புகார் அளிப்பதற்கு அனுமதி பெறவேண்டுமா என்று எனக்கு தெளிவு இல்லாததால் 29.04.2022 அன்று எனது CAO விற்கு கடிதம் மூலமாக ஒரு புகார் அளித்தேன்.

CAO அந்த புகாரை நாங்கள் விசாரிக்க முடியாது சைபர் க்ரைம் குற்றம் போல இருப்பதால் காவல் நிலையத்தில் புகார் கொடுங்கள் என்று கூறினார். மேலும் எனது புகாரை ICC க்கு பார்வட் செய்தார். ICC யில் 04.05.2022 அன்று விசாரணை நடத்தினார்கள். அந்த ICC யில் உள்ள சேர்மன் இவ்வழக்கின் எதிரி வனஜா. விசாரணையின் போது வனஜா ஒரு NGO மற்றும் 4 பணியாளர்கள் குழுவாக இருந்தார்கள் என்னிடம் விசாரித்து நடந்ததை எழுதி

கொண்டார்கள். பின்னிட்டு எனக்கு சைபர் க்ரைம் போலிசிடமிருந்து 27.05.2022 அன்று விசாரணைக்கு அழைப்பு வந்தது. நான் அவர்களிடம் நடந்த விவரத்தை கூறும் போது வனஜா நாகராஜன் என்பவர் தான் எதிரியாக வருவார் என்று தெரிவித்தார்கள். நான் உடனே 01.06.2022 அன்று டைரக்டரிடம் சென்று நான் பகொடுத்த புகாரில் வனஜா தான் எதிரியாக இருக்கிறார் அதனால் அவரை ICC சேர்மனிலிருந்து மாற்றுமாறு கேட்டேன். ஆனால் என்னை 07.06.2022 அன்று GSO அலுவலகத்திலிருந்து IGCAR பிளான்டிற்கு எனக்கு பணி மாற்றம் கொடுத்துவிட்டார்கள்.

பின்னர் நான் 01.07.2022 அன்று மேற்சொன்ன விவரங்களை குறிப்பிட்டு மறுபடியும் ஒரு புகார் அளித்தேன். மேற்சொன்ன நிகழ்வுகளினால் எனக்கு அலுவலகத்தில் மிகவும் அசிங்கமாக இருந்தது, வீட்டிலும் எனது கணவருடன் நிம்மதியாக இருக்க முடியவில்லை. இதனால் எனது கணவருக்கு இதயத்தில் கோளாறு ஏற்பட்டு மருத்துவமனை சிகிச்சையில் இருந்தார். சாட்சி மேற்கண்ட விவரங்களை கூறும் பொழுது அழுது கொண்டே கூறினார். சாட்சியிடம் அதசாஆ 2 ஆவணம் காண்பிக்கப்பட்டது. அந்த ஆவணம் தான் மெயிலில் வந்த அட்டாச்மெண்ட் மற்றும் மெயில் அனுப்பப்பட்ட முகவரிகள். போலிசார் என்னை விசாரணை செய்தார்கள் நான் மேற்படி விவரங்களை அவர்களிடம் கூறினேன்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை –**

எதிரி தரப்பு வழக்கறிஞர் தாக்கல் செய்த மனுவின் பேரில் குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.

Sd.xxx

Typewritten to my dictation in open court read over to the witness in Tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd.V.Lavanya
Judicial Magistrate No.I,
Chengalpattu.